# 02 வீட்டுத் தோட்டம் II

அனைவரும் வீட்டுத் தோட்டத்தில் நிற்கின்றார்கள். மீண்டும் உரையாடல் ஆரம்பமாகின்றது.



திருமதி ஜீவன் : கமலா அக்கா! இந்தப் பாத்திகளில் என்ன போட்டிருக்கின்றீர்கள்?

கமலா : இதில் லீக்ஸ், கோவா, கரட், பீற்றூட், நோக்கல் போட்டிருக்கின்றோம். நேற்றுத்தான் நாட்டினோம்.

சுரேஸ் : அம்மா, போஞ்சி கொஞ்சம் ஆயவா?

கமலா : போஞ்சியும், தக்காளியும், வெண்டிக்காயும், கத்தரிக்காயும், புடலங்காயும், பச்சைமிளகாயும் ஆயுங்கோ.

சுரேஸ் : பாகற்காய் வேண்டாம். அது கசப்பு எண்டு தினேசும், காந்தியும் சாப்பிடமாட்டார்கள்.

கமலா : பீர்க்கங்காயும் கொஞ்சம் முருங்கைக்காயும் ஆயுங்கோ.

சுரேஸ் : அம்மா, முருங்கைக் கீரையும் வேண்டுமா?

கமலா : வேண்டாம் மகன், வேண்டாம். ஜீவன் மாமி வாங்கோ. எங்களுடைய கீரைப்பாத்திகளைப் பாருங்கோ. சம்பல் செய்ய வல்லாரையும், சுண்டலுக்குப் பொன்னாங்காணியும் கங்குங்கும், சொதிக்குக் கொஞ்சம் அகத்திக் கீரையும் ஆய்வோம்.

திருமதி ஜீவன் : போதாதா கமலா அக்கா?

தினேஸ் : கமலா மாமி, இது என்ன பாத்தி?

கமலா : இதில் வற்றாளைக் கிழங்கு நாட்டியிருக்கின்றோம்.

காந்தி : மாமி, இவை என்ன செடிகள்?

கமலா : இவை கருணைக் கிழங்குச் செடிகள். மற்றப்பாத்தியில் சேப்பங்கிழங்குச் செடிகள், அவை மரவள்ளிக் கிழங்குச் செடிகள்.

சுரேஸ் : அம்மா, மாங்காய் ஆய வேண்டுமா?

கமலா : இந்த மரத்து மாங்காய் சரியான புளிப்பு. முற்றிப் பழுத்தால் சரியான இனிப்பு.

தினேஸ் : சுரேஸ், உங்கள் தோட்டத்தில் என்ன பழமரங்கள் உள்ளன?

சுரேஸ் : எங்கள் தோட்டத்தில் பப்பாசி, வாழை, ஜம்பு, வெரலு, தோடை, மாதுளை ஆகிய பழமரங்கள் உள்ளன.

தினேஸ் : எங்கள் வீட்டுத் தோட்டத்தில் அன்னாசி, மாம்பழம், விளாம்பழம், வில்வம்பழம், கொய்யாப்பழம் ஆகிய பழங்கள் கிடைக்கின்றன.

கமலா : சரி, சரி! நேரம் சரியாகச் சுணங்கி விட்டது. பகல்ச் சாப்பாடு சமைக்கவும் வேணும். போவோம், வாங்கோ.


தினேஸ் : நல்லது மாமி, வாங்கோ, போவோம்.

சுரேஸ் : சரி, சரி. அம்மா நீங்கள் போங்கோ. நாங்கள் பழங்கள் கொஞ்சம் ஆய்ந்து கொண்டு வாறோம்.

**பயிர் வளர்ப்போம்! பயன் பெறுவோம்!**

### பாட ஆசிரியருக்கான குறிப்பு

*இந்த உரையாடலைச் சரியான உச்சரிப்புடன் ஆசிரியர் உரத்து வாசிக்க வேண்டும். அதனைக் கேட்டு மாணவர்கள் நன்றாக உரத்து வாசிக்க ஆசிரியர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து. மாணவர் தமக்குள் குழுக்களாகி (ஐவர் கொண்ட குழுக்களாக) பாத்திரம் ஏற்று நடிக்கவும் உதவுங்கள்.*



## செயற்பாடு 01

**கிரகித்தற் பயிற்சி. (வாய்மொழி மூலம்)**
**පාඨම කියවා පිළිතුරු දෙන්න.**


1. சுரேஸின் அம்மாவின் பெயர் என்ன?
2. சுரேஸின் வீட்டிற்கு விருந்தினராக வந்தவர்கள் யாவர்?
3. சுரேஸின் வீட்டிற்கு வந்தவர்களுக்குத் தேநீருடன் வழங்கிய உணவுப் பொருட்கள் யாவை?
4. தோட்டத்தைப் பார்க்க நாங்களும் வரலாமா என்று கேட்டவர் யார்?
5. தினேஸ், காந்தி சாப்பிட மாட்டார்கள் என்று சுரேஸ் கூறிய மரக்கறி யாது?
6. தினேஸ் வீட்டில் இருப்பதாகத் தினேஸ் கூறிய பழமரங்கள் யாவை?
7. நீங்கள் சந்தையில் வாங்கிய மரக்கறிகள் பத்தின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.
8. நீங்கள் விரும்பிச் சாப்பிடும் கிழங்கு வகைகள் ஐந்தின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.
9. கீரைவகை ஐந்தின் பெயர்களைக் கூறுங்கள்.
10. உங்களுக்கு விருப்பமான பழங்களின் பெயர்கள் பத்தைக் குறிப்பிடுங்கள்.

| அறுசுவைகள் | | රස වර්ග |
|---|---|---|
| இனிப்பு | - | පැණි රස |
| கசப்பு | - | තිත්ත රස |
| உவர்ப்பு | - | ලුණු රස |
| புளிப்பு | - | ඇඹුල් රස |
| துவர்ப்பு | - | කහට රස |
| உறைப்பு | - | සැර |









## செயற்பாடு 02


**பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடை வெளிகளில் எழுதுவோம்.**
**දී ඇති රසවලට ගැළපෙන රස වර්ග කොටුවෙන් තෝරා පහත සඳහන් වාක්‍යවල හිස්තැන් පුරවමු.**

---

இனிக்கும், உறைக்கும், புளிக்கும், துவர்க்கும், கசக்கும், உவர்க்கும்.

**உதாரணம்:** - சீனி இனிக்கும்

1. தேன் ............................................
2. பாக்கு ............................................
3. புளியங்காய் ............................................
4. கடல் நீர் ............................................
5. மிளகாய் ............................................
6. வேப்பங்காய் ............................................




## செயற்பாடு 03

**பின்வரும் செயற்பாடுகளில் உள்ள இடைவெளிகளைப் பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு நிரப்புவோம்.**

**සුදුසු අකුරු යොදා හිස්තැන් පුරවන්න.**

**உதாரணம்:- வா........ க்காய் வாழைக்காய்**

1. க ..... தரிக்கா .....
2. பு ..... ..... ங்காய்
3. வெ ..... ..... க்காய்
4. பா..... ..... காய்
5. பூச ..... ......காய்
6. வ ..... ..... ரைக்கீரை
7. அ .... த் ...... க் கீரை
8. வ .... றா..... க்கிழங்கு
9. சே ..... ...... ங்கிழங்கு
10. ம..... வ ...... ளிக்கிழங்கு




## செயற்பாடு 04

**ஆறு சுவைகளுடன் பொருத்தமான வேறு ஆறு பொருட்களின் பெயர்களை இணைத்து வாக்கியங்கள் அமைப்போம்.**

**ඉහත දී ඇති රස සහිත වෙනත් දේවල් හයක් තෝරා වාක්‍ය ලියන්න.**

**உ-ம்: கரும்பு இனிக்கும்.**

1. ..............................................................................................
2. ..............................................................................................
3. ..............................................................................................
4. ..............................................................................................
5. ..............................................................................................



## செயற்பாடு 05

**சந்தையில் காணப்படும் மரக்கறிவகை, பழவகை, கீரை வகை, கிழங்குவகை ஆகியவற்றை அட்டவணைப்படுத்துவோம்.**
**වෙළෙඳපොළේ ඇති දේවල නම්වලින් පහත සඳහන් කොටුව පුරවන්න.**

| மரக்கறி | கீரை | கிழங்கு | பழவகை |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | வல்லாரை | மரவள்ளிக்கிழங்கு | வாழைப்பழம் |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## எழுத்து மொழியை அறிந்து கொள்வோம்

1. அ) எனக்குப் பழம் வேண்டும், தாருங்கள்.
   எனக்கு வடை வேண்டும், தாருங்கள்.

   ஆ) எனக்குப் பழம் வேண்டாம், வடை தாருங்கள்.
   எனக்குப் பாண் வேண்டாம், சோறு தாருங்கள்.

   இ) எனக்குப் பழம் வேண்டாம், வடை வேண்டும்.
   எனக்கு பாண் வேண்டாம், சோறு வேண்டும்.

2. ஆ) எங்களுக்குப் பழம் வேண்டும், தாருங்கள்.
   எங்களுக்கு வடை வேண்டும், தாருங்கள்.

   ஆ) எங்களுக்குப் பழம் வேண்டாம், வடை தாருங்கள்.
   எங்களுக்குப் பாண் வேண்டாம், சோறு தாருங்கள்.

   இ) எங்களுக்குப் பழம் வேண்டாம், வடை வேண்டும்.
   எங்களுக்குப் பாண் வேண்டாம், சோறு வேண்டும்.

## உயிர் எழுத்துக்கள் 12

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

| குறில் කෙටි | நெடில் දිග |
|---|---|
| அ | ஆ |
| இ | ஈ |
| உ | ஊ |
| எ | ஏ |
| ஒ | ஐ |
| | ஓ |
| | ஔ |

| குறுகிய ஓசை உடையவை කෙටි ශබ්ද | நீண்ட ஓசை உடையவை දිග ශබ්ද |
|---|---|
| அடி | ஆடி |
| கலை | காலை |
| மலை | மாலை |
| சிலை | சீலை |

## செயற்பாடு 06

**பின்வரும் சொற்களில் வேறுபட்ட சொல்லின் கீழ்க் கீறிடுவோம்.**
**නොගැළපෙන වචනය යටින් ඉරක් අඳින්න.**


உ-ம்:- மாம்பழம், தோடம்பழம், வேப்பங்காய், பலாப்பழம்

1. வாழை, வெண்டி, மா, பலா
2. வல்லாரை, முருங்கை, கத்தரி, சாறணை
3. அப்பம், மிளகாய், கத்தரி, புடோல்
4. மாமரம், புல், புளியமரம், வேப்பமரம்
5. தோசை, வடை, அன்னாசி, அப்பம்

## செயற்பாடு 07

**பொருத்தமான முடிக்கும் சொற்களை இணைப்போம்.**
**සුදුසු ක්‍රියා පදය යා කරන්න.**


| | |
|---|---|
| வீட்டுத் தோட்டம் | இனிக்கும் |
| மரம் வளர்த்துப் | உறைக்கும் |
| மிளகாய் | கசக்கும் |
| வேப்பங்காய் | செய்திடுவோம் |
| வல்லாரைக்கீரை | சத்துள்ள உணவாகும் |
| பலாப்பழம் | பயன் பெறுவோம் |



**செயற்பாடு 08**

**இணைப்போம். යා කරන්න.**

| | |
|---|---|
| 1. உயிர் எழுத்துக்கள் | 07 |
| 2. குறுகிய ஓசையை உடையவை | 05 |
| 3. நீண்ட ஓசையை உடையவை | 12 |
| 4. குறில் எழுத்துக்கள் | குறில் |
| 5. நெடில் எழுத்துக்கள் | நெடில் |



**செயற்பாடு 09**


**வீட்டுத் தோட்டம் என்ற பாடத்தில் இருந்து குறில் சொற்கள் ஐந்தும் நெடில் சொற்கள் ஐந்தும் எழுதுவோம்.**

| குறில் | நெடில் |
|---|---|
| 1. ...................................... | 1. ...................................... |
| 2. ...................................... | 2. ...................................... |
| 3. ...................................... | 3. ...................................... |
| 4. ...................................... | 4. ...................................... |
| 5. ...................................... | 5. ...................................... |

## பாடுவோம்





கத்தரி மிளகாய் தக்காளி வெண்டி
காய்கறிகள் இவை செடியிலே.
பூசணி புடோல் பாகல் அவரை
புத்தம் புதியவை கொடியிலே.

தேங்காய் மாங்காய் முருங்கை பலாக்காய்
தேசம் எல்லாம் விளையும் மரத்திலே.
வல்லாரை கங்குங் சாறணை சிறுகீரை
வளருது எங்கள் தோட்டத்திலே.
வளருது எங்கள் தோட்டத்திலே.
வளருது எங்கள் தோட்டத்திலே



### பாட ஆசிரியருக்கான குறிப்பு

*பாட ஆசிரியர் மேலே உள்ள பாடலைச் சரியான உச்சரிப்புடன் வாசித்துக்காட்டுங்கள். அதைத் தொடர்ந்து மாணவர்கள் உரத்து வாசிக்க வழி செய்யுங்கள். அதைத் தொடர்ந்து ஆசிரியர் தாள இசையுடன் பாடிக்காட்டி; பாட வழி செய்யுங்கள். குழுவாகவோ, தனித்தனியாகவோ பாடவைத்து மதிப்பீடு செய்யுங்கள்.*